[12th July 1962

தொழில் பயிற்சிப் பள்ளி (திருச்செந்தூர்)

* 258 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூரிலுள்ள சர்க்கார் தொழிற் பயிற்சிப் பள்ளிக்குப் போதுமான கட்டிட வசதியில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

(இ) அதற்குக் கட்டிட வசதி செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

(உ) அங்கு தற்போது என்னென்ன கைத்தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டுவருகின்றது ?

(எ) அப்பாடசாலையில் புதிதாக என்னென்ன கைத்தொழில்களில் பயிற்சியளிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) As the present site of the Industrial Training Institute measuring 64 cents is very near the sea and the adjoining area is not suitable for future expansion, a separate site measuring 22.67 acres is under acquisition at Veerapandipattinam for the construction of pucca buildings.

(உ) Carpenter and Fitter trades.

(எ) Blacksmith, Wireman, Moulder and Sheet metal work trades.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், கட்டிடங்களுக்காக ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் தொகை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : They are all in one pattern. It is the same expediture Rs. 13 lakhs.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், கட்டிட வேலை உத்தேசமாக எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது 'லாண்ட் அக்விசிஷன்' செய்து கொண்டிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் கட்டிடம் கட்டுவது ஆரம்பிக்கப்படும்.

ரெவின்யூ கோர்ட் (கும்பகோணம்)

* 259 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ம் வருடம் முடிய கும்பகோணம் ரெவின்யூ கோர்ட்டில் தாக்கலான வழக்குகள் எத்தனை ?

(இ) நியாய வார நிர்ணயம் கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(உ) பண்ணையாட்கள் மனு எத்தனை ?

(எ) இவைகளில் பைசல் செய்யப்பட்டது எத்தனை ?

12th July 1962]

THE HON. SRI V. RAMAIAH : (அ) to (உ) The number of petitions pending on 1st April 1960 was 117, of which 6 were filed under the Tanjore Pannaiyal Protection Act and the rest under the Fair Rent Act. The number of petitions received during 1960–61 was 779, of which 118 were filed under the Pannaiyal Act and the rest under the Fair Rent Act.

(எ) The number of petitions disposed of during 1960–61 was 118 under the Pannaiyal Act and 648 under the Fair Rent Act.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களில் இருந்தே தஞ்சை ஜில்லாவில் இப்போது இருக்கக்கூடிய இரண்டு ரெவின்யூ கோர்ட்டுகள் போதாது என்று தெரிகிறது. இந்தச் சட்டங்களில் எடுக்கும் நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்தால்தான் இரு சாராருக்கும்—மிராசுதாருக்கும், குடியானவர்களுக்கும் நன்மை ஏற்பட முடியும். ஆகவே, ரெவின்யூ கோர்ட்டை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வி. ராமைய்யா : ரெவின்யூ கோர்ட்டை அதிகரிப்பது சம்பந்தமாக இப்போது ஒன்றும் யோசனை இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஏற்கனவே இருக்கிற வேலை அதிகமாக இருக்கும்போது குடியிருப்பு மனைப் பாதுகாப்புச் சட்டத்தை அமல் நடத்தும் பொறுப்பும் இந்த இரண்டு அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இனியாவது அந்தக் கோர்ட்டை அதிகரிக்க ஆலோசிப்பார்களா ?

கனம் திரு. வி. ராமைய்யா : இப்போது இருக்கக்கூடிய நிலையில் அவர்கள் போதுமான காலத்தை இதற்காக ஒதுக்கி கணிசமான அளவுக்கு இதில் ஏற்படக்கூடிய சர்ச்சைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் தனியாகப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முயற்சிக்கும்.

சிறு தொழில்கள் (திருச்சி)

*** 260 கேள்வி.—திரு. அ. பொ. தர்மலிங்கம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவை எங்கெங்கு ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN (அ) & (இ) There is no districtwise allocation of the Plan provision. However, the following are the Small Scale Industries Units proposed to be established in Tiruchirappalli district during the Third Five-Year Plan period and their cost :—